Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. [illegible]
விரோதிஞு ((1889) புரட்டாசி 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

ஓம்
சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- குரோதிஞு பங்குனிமீ சாஉ வெள்ளிக்கிழமை (19 March. 1965) [இல-டும]

## தேர்தலும் நாமும்

( ஓர் இலங்கைத் தமிழன் )

இலங்கைசுதந்திரமடைந்த பொழுது இனம், நிறம், மொழி, சமயம் முதலிய வேறுபாடுகள் தலைகாட்டவில்லை. இலங்கைவாழ் மக்கள் யாபேரும் சம உரிமையோடு வாழ்ந்தார்கள். அரசியலிலும் பங்குபற்றினர்கள். பொதுவாக முற்போக்குடைய இடதுசாரிகளும் அப்படியல்லாத வலதுசாரிகளும் இரண்டுபெரும கட்சிகளாகப் பிரிந்தார்கள். சிறுபான்மையான தமிழர்களின் தமிழ்க் காங்கிரசும் மலைநாட்டுத் தமிழர்களின் தொழிற்கட்சிகளும் தத்தம் இனத்திற்கு வேண்டிய உதவிகளைப் புரிந்தனர். 1951-ம் ஆண்டு பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சுதந்திரக் கட்சியை உண்டாக்கிச் சிங்களமொழியை அரசாங்க மொழியாகவும் பௌத்த சமயத்தை அரசாங்கமதமாகவும் ஆக்குவதாகக்கூறிச் சிங்கள மக்களைத் தட்டி எழுப்பிய பொழுது சிங்கள மக்கள் தமிழ்மக்களே பரம்பரைப் பகைவர்கள் என்ற உணர்ச்சியைப் பெற்றுள்ளனர். தமிழ்த்துவேஷம் தலைஎடுத்த 1958-ம் ஆண்டு பாரதூரமான கலகம் நடந்து தமிழர்கள் அல்லோலகல்லோலப்பட்டனர். இரு இனத்தவர்களையும் ஒற்றுமையாய் வாழவிட்டிருந்தால் இலங்கை நன்றாய் முன்னேறியிருக்கும். பண்டாரநாயக்காவும் தன்னை முன்னேற்றி வைத்தவர்களுக்கே இரையானார். இந்தக் கலக்கமான சூழ்நிலையில் இலங்கைத் தமிழரின் கதி என்ன? தமிழருக்கு என்று ஒரு தனிநாடு இடையாது. இலங்கையில் வாழ்வதற்கு சிங்கள மக்களின் ஆதரவு வேண்டும் அது கிடைப்பது குதிரைக் கொம்பு. இலங்கைச் சரித்திரத்தில் தமிழரே சிங்களவரின் பரம்பரை விரோதிகள் என்று சிங்கள மக்களுக்குப் போதிக்கும் பொழுது எப்படி நாம் அந்த ஆதரவை எதிர்பார்க்கலாம் அன்னியரான பிரித்தானியரின் ஆட்சியில் சகலரையும் சமமாக பிரித்தானியர் நடத்தினர். ஆனால் அவர் இலங்கையைவிட்டகலும்பொழுது தமிழரின் கதி என்ன என்பதைத் தீவிரமாகச் சிந்தித்தனரல்லர். தமிழருக்கும் தமிழ்

தொடர்ச்சி 2-ம் பக்கம்

### நற்சிந்தனை

ஆருத காதல்சேர்
அடியார் அகத்தூறும்
மாருத இன்பமே
மாதவனே கண்வளராய்.

### எங்கள் அறிவித்தல்

பாராளுமன்றப் பொதுத் தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவப்பிரகாசயந்திரசாலை அலுவலக ஊழியர்களுக்கு 22-3-65 திங்கட்கிழமை விடுமுறை வழங்கப்படும்.

— அதிபர்.

நிகழ்ச்சி எந்தப் புராணத்திலும் இல்லை.

நல்ல வழிகாட்டுவோம் உடுபுடவை சம்பளம் தருவோம் என்று சைவர்களைக் கிறீஸ்தவர்கள் அடுத்துக் கெடுக்கிறார்கள், இன்று அரசியல் என்ற சூறுவளியும் கடவுள் இல்லை என்ற சூறுவளியையும் காணமுடிகின்றது. சித்தியடைவதற்காகச் சமயம் எடுப்பதுண்டு ஆனல் மந்திரமாவது என்பதுபோன்ற பதிகங்கள் சைவத்தினதும் திருநீற்றினதும் பெருமையை அறியவேண்டும் என்பதற்காகவே பாடப்புத்தகத்தில் சேர்க்கப் பட்டுள்ளன. எங்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## தமிழ் அழிந்துவிடுமா?

[ புலவர் மு. கணபதிப்பிள்ளை அவர்கள் ]

இன்று நம்மவர்களிடையே தமிழ் அழியப்போகின்றது; சைவம் மறையப் போகின்றது. என்ற பீதி ஏற்பட்டுள்ளது. இன்றைய சூழ்நிலையில் அத்தகைய பயம ஏற்படாமல் இருக்கவும் முடியாது. மனிதனல் ஒலிக்கப்படுகின்ற பொருள் பொருந்திய ஒலியையே மொழியென்று அழைப்பர். உலகத்திலே 2796 மொழிகள் இருக்கின்றன. அவைகளுட் சிறந்த மொழிகள் ஆறு. அவைகளுட் தமிழ்மொழியும் ஒன்றெனபது குறிப்பிடத்தக்கதொன்றாகும். அமெரிக்கர்கள் இன்று கண்டுபிடித்த மொழியியற்கலையை, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களிற்காணமுடிகின்றது. அவ்வாறிருந்தும் மொழியியற்கலையை அமெரிக்கர்கள் கண்டுபிடித்தார்கள் என்று கூறும் அடிமை மனப்பான்மை பொருந்திய நட நாட்டறிஞர்கள் வெட்கப்பட வேண்டும. வேதனையடைய வேண்டும். அதுமட்டுமல்ல திறனய்வுக் கலையை ஆங்கிலேயரிடம்தான் தமிழன் கற்றுக்கொண்டான் என்று கூறுகின்ற பச்சோந்திகளும் நம்மிடையே இருப்பார்கள். இன்றைய திறனய்வாளர்களெல்லாம் பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்களிடம் பிச்சை வாங்க வேண்டியவர்களாவர். இன்று சிறுகதைத் துறை வளர்ச்சியடைந்துள்ளது நாவலருக்கு முன் நல்ல வசன அமைப்பைக் காணமுடியாததுபோலப் புதுமைப் பித்தனுக்கு முன் சிறுகதை வாடையையே காணமுடியாதென்பர் ஒரு சாரார். அது மிகவும் தவறு. பழந்தமிழ் இலக்கியங்களாகிய கலித்தொகை நற்றிணை அகநானூறு போன்ற இலக்கியங்களிலுள்ள ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு சிறுகதையை அடக்கியுள்ளது என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. பழந்தமிழ் நூல்கள் இன்று தமிழ் நாட்டில் மட்டுமல்ல உலகம் முழுவதுமே பரவியுள்ளனவென்பதை உலகறியும். திருக்குறளும் திருவாசகமும் மொழிபயர்க்கப்பட்டுப் போற்றிப் டிக்கப்படாத நாடுகளேயில்லையெனலாம். டென்மார்க்கிலே திருக்குறள் இதுவரை மொழிபெயர்க்கப்படாதிருந்தும் திருவாசகம் டேனிய மொழியில் அச்சிடப் பெற்று அந்நாட்டவரின் பெரு மதிப்பையும் பெற்றுள்ளதென்று, டென்மாக்கிலிருந்து தமிழ் கற்பதற்காக அண்ணமலைப் பல்கலைக் கழகத்திற்குவந்து தமிழ் கற்ற வ் இன்கின்ரிஸ்ச என்ற நண்பர் தெரிவித்தார். இன்று பிரான்சிய மொழியிலே அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் அச்சிடப்பெற்று ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான பிரதிகள்விற்பனையாகின்றன. இவ்வாருக நம் மொழியைச்

தொடர்ச்சி 4ம் பக்கம்

## கந்தபுராணம்

## ஒரு மாபெரும் கடல்

[சைவபரிபாலன சபை யாதரவில் நாவலர் மண்டபத்தில் **11-3-65** ல் நடைபெற்ற கச்சியப்ப சிவாசாரியர் குருபூசையின் போது வித்துவான், சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை B. A. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.]

கந்தபுராணம் ஒரு பெரிய கடல், யாழ்ப்பாணக் கலாச்சாரம் கந்தபுராணக் கலாச்சாரம். கந்தபுராணமே இந்நாட்டின் சொந்தபுராணம், கந்தபுராணம் சொல்வதென்ன? பதி-பசு பாசமாகிய முப்பொருளுண்மைகளைக் கச்சியப்பர் தந்தார், அதை நாவலர் நமக்குக் காட்டினர். மெய்ப்பொருட் துறையிற் சிறந்தவர்கள் மிகச்சிலர், அநீதி புரிந்த அசுரர்கள் தண்டிக்கப்பட்டார்கள். சேர் பொன். இராமநாதன் போன்ற ஆன்மீக அறிவுடையவரே நமக்கு அரசியற் தலைவராக வேண்டும். இறைவன் திருவருள் நம்மைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது. உலோகாயதத்தாலே நம்நாடு பெருந் தொல்லைகளை அனுபவிக்கின்றது.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்று சைவநீதிகளைக் கந்தபுராணக் கதைகளின் மூலம் நமக்குக் காட்டுகிறர். அதிமதுர அதியத்துவதேமதுர சுத்தச் செந்தமிழ் என்று நாவலர் கூறுகின்றர்.

எல்லா இலக்கியங்களிலும் காணமுடியாத சிறப்பைக் காணமுடிகிறது. உபாத்திரங்கள் சண்டை போடுகின்றன, தாமம், அதர்மம் இதுவே இலக்கியங்களின் பொதுநெறி கச்சியப்பர் சூரனையும். கந்தனையும் பொருதவிட்டுக் காட்டும் காட்சி கண்கொளாக் காட்சியாகும். இராமன் ஒழித்து நின்று கொல்லுகிறன், இராமனை வாலி கண்டபடி பேசுவதைக் காண்கிறேம்.

சேக்ஸ்பியரிலும் இக்காட்சி உண்டு ஆனல் கந்தனுக்குத் தோற்ற சூரன் ஆறுமுகக் கடவுளை வணங்கும் காட்சியைக் காணமுடிகிறது. இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயர்கள் நெஞ்சம்

## கதிர்காம மடங்கள்!

கதிர்காமத் தலத்தின்கண்ணே பல்லாண்டு காலமாக நிலைபெருகவிருந்த திருமடங்களை அகற்ற அரசாங்கம் முனைந்துள்ளது. ஆலயத்தின் முன்னே, சுவாமி எழுந்தருளி வருகின்ற வீதியின் பாங்கர் இத்திருமடங்கள் விளங்குகின்றன. இவை ஒவ்வொன்றும் அன்பர் வழிபாடாற்றும் தலங்களென்னின் அதுமிகையன்று. அத்திருமடங்களின் அடியார்களும் அன்பர்களும் வந்து தங்கியிருக்க வசதிகளுள. ஆலயப் பூசைகளையும் உலாக்களையும் கண்டு இன்னருள்பெற வசதியான இடங்கள் இவைதாம். இங்கே சைவமணம் கமழாநிற்கின்றது. இந்நோக்கத்துடனேயே இவற்றை இவ்விடங்களில் ஆன்றோர் அமைத்தனர் போலும்.

இதுமட்டுமல்ல. இந்தத் திருமடங்களில் பூசைகள், வழிபாடுகள், புராணபடன விரிவுரைகள், மாகேசுர பூசைகள் ஆதியன நடைபெறுகின்றன. சுவாமி திருவுலா வரும்பொழுது பூரணகும்பங்கள் வைத்து, மடைகள் பரப்பி இறைவனுக்கு அருச்சனை ஆராதனைகள் நடாத்தப்படுகின்றன. இவை இந்த இடங்களில் இருப்பதனாலேயே இவ்வாறு செய்ய முடிகின்றது. வேறிடங்களிலிருப்பின் இவ்வாறு செய்ய வாய்ப்பு ஏற்படாதன்றோ! தெய்வயானை அம்மன் மடம்: வள்ளியம்மன் மடம். முத்துலிங்கா மடம் ஆதியாம் மடங்கள் ஆலயங்களாகவே விளங்குகின்றன. அங்கு அன்பர்கள் பக்தி பரவசத்தராய், கரசரணதியங்கத் துன்றிய புளகமாய்த் தொழுத கையினராய் நிற்றலை நாம் கண்டுள்ளோம். அத்தகைய மூர்த்திகரம் வாய்ந்த நிலையங்களைவிட்டுப் பிறிதோர் இடத்தில் அவற்றை அமைத்தல் பொருந்தாது. நமது மூதாதையரும் இருந்து வழிபட்டு, அவர்கள்தம் அருள்முகிழ்த்த இடங்கள் அல்லவா இவை. பலர் கூடிப் பல்லாண்டு வழிபட்டமையாற் சக்தி பெற்று விளங்குவனவாகும் இவை.

ஆகவே இவற்றை அரசினர்க்கறிவுறுத்தி ஆவன செயயச் சைவ சங்கங்கங்கள் யாவும் ஒன்றுசேர்ந்து முயற்சி செய்யவேண்டுவது வேண்டப்படுவதொன்றாகும். எம்மிடையேயுள்ள சைவமுதறிஞர் இவற்றிற்றலையிடின் வெற்றிகிட்டுவதற்கையமிலது. ஞாலமுய்ய, நம்முய்ய சைவநன்னெறியின் சீலமுய்ய முயல்வோமாக. கதிரமலைக்கந்தன் ஊக்கமூட்டி உய்நெறிகாட்டி உவந்தருள் புரிவாராக.

கொழும்பு, 6-3-65.

சைவ அன்பன்
சோ. க. வேலாயுதர்

## பிரவேச பண்டித வகுப்புகள்

பண்டத்தரிப்பு மகளிர் உயர்நிலைப் பள்ளியில் பிரவேச பண்டித வகுப்புக்கள் கீழ் வரும் கிரமப்படி நடைபெறுகின்றது.

திங்கள் பி. ப. 4—5 மணிவரை
புதன் பி. ப. 4-5 மணிவரை.
வெள்ளி பி. ப. 4—5 மணிவரை
ஞாயிறு மு.ப. 9—12 மணிவரை

வித்துவான் பொன். கந்தசுவாமி, வித்துவான் ச. அடைக்கலமுத்து, பண்டிதர் இ. இராமலிங்கம், புலவர் க. வேலமுருகன் முதலியவர்கள் ஆசிரியர்களாகக் கடமையாற்றுகின்றனர்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

குரோதி ஞூ பங்குனி மீ
௬ உ வெள்ளிக்கிழமை

## எதிர்வரும் தேர்தல்

மார்ச்சு மாதம் 22-ந் தேதி நடைபெறுந்தேர்தல் இந்நாட்டின் சரித்திரத்தில் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். சென்ற பொதுத் தேர்தலின் பின் அமைக்கப்பட்ட அரசாங்கம் மக்களுக்குப் பல இன்னல்களை உண்டாக்கிவிட்டது. வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களின் விலைகள் மிக உயர்ந்துவிட்டன அத்தியாவசியம் தேவையான பல பொருட்களை மக்கள் பெறமுடியாதநிலைமையில் கஷ்டமுறுகின்றனர்கள்: தனிச்சிங்களச் சட்டமியற்றப்பட்ட பின் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கு மிடையில் ஒற்றுமைக் குறைவேற்பட்டுவிட்டது. சிங்களத் தேர்ச்சி பெருத பல தமிழர்கள் அரசாங்க உத்தியோகத்திலிருந்தும் நீக்கப்பட்டுவிட்டனர். தமிழ்ப் பட்டதாரிகள் பலர் உத்தியோகம் பெறமுடியாமையில் கலங்கிக் கொண்டிருக்கின்றனர். இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் புண்ணிய பூமியாக விளங்கும் பாரத நாட்டுக்கு அவர்கள் யாத்திரை செய்ய வியலாமலிருக்கின்றனர் இப்பொழுது ஆட்சிப்பீடத்திலுள்ள அரசாங்கத்தினுடைய அயல்நாட்டுக் கொள்கை நமது அயல்நாடாகிய பாரத தேசத்துக்கு நன்மை பயக்கக்கூடியதாகவில்லை.

இக் குறைகளையெல்லாம் நீக்கிச்சிறுபான்மை மக்கள் திருப்தியடையும் வண்ணம் அரசியல் மொழி விவகாரங்களைச் சுமுகமாகத் தீர்த்து வழிபாட்டுரிமையும் வழங்கி, நாட்டினுடைய நலனைப் பாதுகாக்கக்கூடிய ஒரு கட்சி ஆட்சிப் பீடத்திலேறினுற்ருன் மக்களுக்கு நன்மைஉண்டாகும். அவர்கள் இன்பமாக வாழலாம்.

சென்ற டிசம்பர் 3-ந் தேதி தொடக்கம் இன்றுவரை நாட்டில் தேர்தல் பிரசாரத்தினுல் பெருங் கொந்தளிப்பு. ஒவ்வொரு கட்சியும் தனது கொள்கைகளை விளக்குதற்குப் பொதுக் கூட்டங்களை நடத்தியது சில கட்சிகள் தமது கொள்கைகளைத் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் பத்திரிகைகள் மூலமும் வெளியிட்டன. ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் எதிர்க்கட்சி அபேட்சகர்களைப் பற்றிக் குறை கூறியிருப்பார்கள்;

நேயர்கள் நெஞ்சம்

## நால்வர் பாடல்களைத் திருத்தியமைத்தனரா?

திரு க. இராமச்சந்திரன் அவர்கள் யோகசுவாமிகள்பேரில் பாடிய அர்ச்சனை மாலையென்னும் செய்யுளின் அச்சிட்ட பிரதியொன்று எமக்குக் கிடைத்தது. அதில் பின்வருமடிகள் எமது மனத்துக்கு மிகுந்த துன்பத்தை விளைவித்தன.

"நால்வர் பாடலின் நயங்கள
னைத்தையும்
கருத் திழக்காது. காலத்திற்
கேற்பத்
திருத்தி யமைத்த தேசிக
போற்றி"

நால்வர் பாடல்கள் இக்காலத்துக் கொவ்வாதனவையினுல் யோகசுவாமிகள் அவற்றைத் திருத்தியமைத்தனர் என்ற கருத்து இவ் வடிகளில் தொனிக்கின்றது. நால்வர் பாடல்கள் எக்காலத்துக்கும் உகந்தன. ஓதுகின்றவர்களுக்கு இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் கொடுக்க வல்லவை. நால்வரும் பசுகரணம் நீங்கி சிவகரணமடைந்த மெய்யடியார்கள். அவர்களுடைய வாக்குச் சிவவாக்காகும். "என துரை தனதுரையாக" என்றருளிச் செய்தனர் ஆளுடையபிள்ளையார். அத்தகைய தெய்வீகத் தன்மை வாய்ந்த சைவத் தெய்வத் திருமுறைகளை யோகசுவாமிகள் திருத்தியமைக்க ஒரு போதுந் துணியார். அங்ஙனம் அவர் செய்தனரெனக் கூறுவது பெருஞ் சிவாபராதம். சைவசமயத்துக்குப் பெரும் அவமானம் யோகசுவாமிகளுடைய பெயருக்கும் தீராத இழுக்கு.

அர்ச்சனை மாலை இலக்கண அமைதியற்றதாயும் அகவற்பாவுக்குரிய சீர்தளைகளும் முறைப்படி யமையாததாயும் இடையிடையே கருத்துப் பிழைகள் கொண்டதாயுங் காணப்படுகின்றது. திரு. இராமச்சந்திரனுடைய செயல் சைவ சமயத்தை அவமதித்ததாகும். நால்வர் பாடல்களைப்பற்றி அவர் குறிப்பிட்டமையையே இங்கே வன்மையாக ஆட்சேபிக்கின்றோம்

மு. கணபதிப்பிள்ளை

கரவெட்டி,
14-3-65.

x x x

## மகாசங்காபிஷேகமும் இலட்சார்ச்சனையும்

ஊர்காவற்றுறை புளியங்கூடல் மகாமாரியம்மன் கோயிலில் குரோதி ஞூ பங்குனி மீ 24 உ (6-4-65) செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் அபிஷேக ஆராதனைகளும் இலட்சார்ச்சனையும் ஆரம்பிக்கப்பட்டு 27 உ (9-4-65) வெள்ளிக்கிழமை மகா சங்காபிஷேகமும் குளிர்த்தியும் நடைபெற்ற பின் அம்பாள் வீதி உலா வரும் காட்சியும் நடைபெறும். அடியார்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

இவையெல்லாம் சனநாயக ஆட்சி நிலவும் நாட்டில் சாதாரணமாக நிகழும் சம்பவங்களே. இவ்வித பொய்ப் பிரசாரங்களினுல் ஒருவன் தனது சுய புத்தியை இழக்கக்கூடாது நடுவு நிலைமையுடனும் சுயநலமில்லாமலும் நாட்டிலுள்ள எல்லாமக்களுக்கும் சிங்களவராயினும்சரி, தமிழராயினும்சரி, முகமதியராயினும் சரி, ஏனைய சாதியினராயினும் சரி யாவரும் இலங்காதேவியின் மக்கள் எனக்கருதித் தொண்டாற்றக்கூடிய ஒரு அரசாங்கத்தை அமைப்பதே வாக்காளரின் தெய்வீகப் பணி. அது மக்களுடைய புனிதமான வாக்குரிமையில் தங்கியிருக்கின்றது. எல்லாமக்களுடைய பொது நலனுக்குமாகச் சனநாயக ஆட்சியை நாட்டில் நிருவகிக்கக் கூடிய ஒரு கட்சி ஆட்சிப்பீடத்திலமரவேண்டுமென ஆண்டவனை யாவரும் பிரார்த்திக்க வேண்டும். ஒவ்வொரு வாக்காளனும் தனது மனச்சாட்சியின்படி எந்தக்கட்சி நாட்டின் நலனுக்கு நல்லசேவையாற்றுமென்பதை நன்கு சிந்தித்துத் தனது வாக்கை அக்கட்சிக்கு அளிக்கவேண்டிய கடப்பாடுடையவனுயிருக்கின்றுன்.

## மது ஒழிப்பின் அவசியம்

12-3-65ம் தேதி வெளிவந்த இந்துசாதனத்தில் தங்கள் மதிப்புக்குரிய ஆசிரிய தலையங்கத்தை வாசித்தேன். தங்களுக்கும் உயர் திரு நீதிஅரசர் டக்டர் H. W தம்பையா அவர்கட்கும் இலங்கைச் சமூகம் கடமைப்பட்டவர்களாயிருக்கிறுர்கள். மதுபானம் அருந்துவதைப்பற்றியும் அதனுல் விளையும் தீமைகளைப்பற்றியும் நன்கு எடுத்துரைத்திருக்கிறீர்கள்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களுடைய பொன் மொழிகளை மென்மேலும் மக்கள் கவனிப்புக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். மதுபானத்தை ஒழிக்கிறது பாராளுமன்ற அங்கத்தவர்களின் ஒரு பெரும் கடமையாகும். அரசியல் ஸ்தாபனங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்களும் முயற்சி எடுத்துமதுபானவிலக்குதலுக்குப் படுபடுவது உசிதம்.

சு. சிவசுப்பிரமணியம்
கொழும்பு, 16-3-65.

## ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திரத்தில் மிருத்யுஞ்ஜ யக்ஞம்

வருகிற விசுவாவசு ஞூ வைகாசி மீ 18 உ (31-5-65) இடபராசியில் சூரியன், சந்திரன் புதன், சுக்கிரன், குரு, ராகு ஒன்று சேருகின்றன. அத்துடன் பூரண சூரிய கிரகணம் நிகழும். அல்லாமலும் செவ்வாய் சிங்கத்திலும் சனி கும்பத்திலும் ஒருவர்க்கொருவர் சமசப்தம நிலையிலும் பரஸ்பர திருஷ்டியுடன் சேருகின்றன இவ்வாருன கோள்களின் சேர்க்கையினுல் மக்களுக்குப்பல இன்னல்கள் நேருமென அஞ்ச வேண்டியிருக்கின்றது, உலகின் எப்பகுதியைப் பார்த்தாலும் கலக்கமான நிலை காணப்படுகின்றது. இவ்விதமான இன்னல்களைத் தவிர்த்து மக்களுக்கு இன்பத்தை யளிக்க வல்லது இறைவனருளே. அதனை மக்கள்பெறும் பொருட்டுஸ்ரீ முன்னேஸ்வரக்ஷேத்திரத்தில் குரோதி ஞூ பங்குனி மீ 20 (29-3-65) திங்கட்கிழமை [illegible]

முன்னேஸ்வரசுவாமி சந்நிதானத்தில் மகா மிருத்யுஞ்ஜயயக்நம் ஆரம்பித்து நடைபெறும். அன்பர்கள் யாவருங் ஷ யக்நத்தில் பங்குபற்றி இறைவனருளை யடைவார்களாக.

## வரிகளின் கொடுமை நீங்க வழியில்லையா?

சென்ற இதழில் இத்தலைப்பங்கம் கொண்ட கட்டுரையை எம்வாசக நேயர்கள் சிந்தித்திருப்பார்கள். அதில் சில கணக்குப் பிழைகள் சொற்பிழைகள் சாத்திராப் பிரகாரம் நேர்ந்துவிட்டன. அவற்றை இப்பொழுது நாம் திருத்த வரவில்லை. தனிச்சிங்களச் சட்டம் வந்தநாட்களில் ஒருஇலட்ச ரூபா வரையிற் பெறுமதியான நிலம் வைத்திருந்த ஒரு நடுத்தரக் குடும்பத்துத் தலைவர் இறக்கும் பொழுது அவருடைய நிலத்தை மும்மடங்காக மதித்து மூன்றில் ஒருபங்கை செல்வ வரி என்றும் பூதல்வரி என்றும் நன்கொடை வரி என்றும் எல்லாவற்றுக்கும் மேலாக மூலதனவரி என்றும் எப்படி விழுங்கிவிடுகின்றன என்பதை ஒரு உதாரணம் கற்பனை முறைபிற காட்டி விளக்கியிருந்தோம.

இந்தப் புதுவரிகளின் கொடுமையை இன்னும் ஒரு உதாரணத்தால் இன்னும் தெளிவாக விளக்கிக் காட்டுவாம். ஒரு பெரிய குடும்பம் — தலைவன், தலைவி, ஆறுபிள்ளைகள் இத்தலைவனைப் பெற்று வளர்த்து ஆளாக்கி வைத்த தாய் தந்தையர், இப்பொழுது முதுவயதில் தமக்கென வேறு வருவாய் ஒன்றுமின்றி மகனுல் தாபரிக்கவேண்டிய நிலையிலிருப்பவர்கள். அதேபோலத் தலைவியின் தாய்தந்தையரும் இருவர். எல்லாமாக இத்தலைவன் தலைவியில் தங்கியிருப்பவர்கள் பத்துப்பேர். இப்போதைய சட்டப்படி இந்தப் பத்துப்பேரில் நால்வருக்குத்தான் பிச்சைச் சம்பளம்போன்ற 20 ரூபா 66 சதம் வருவாயில் வரி கொடாமல் கழிக்கலாம். மற்ற ஆறு பேருக்கும் ஒருரூபா தானும் செலவு செய்தால் அதற்கு அரசாங்கத்துக்கு வரி கட்ட வேண்டும். ஆகையால் இத் தம்பதிகள் தங்கள் மூதுகுரவர்கள் நால்வரும் உயிரோடிருக்கும்போது பிள்ளை பெறக்கூடாது. தற்செயலாக ஒரு பிள்ளை பிறந்துவிட்டால் இவ்வயோதிபரில் ஒருவரை ஊரிலேபோய்ப் பிச்சை எடுக்கச்சொல்லி விடவேண்டும். நாலு பிள்ளைகள் பிறந்துவிட்டால் நான்கு வயோபரையும் வெளியேற்றி விடவேண்டியதுதான். ஐந்தாவது பிள்ளை பிறந்தாலோ பேச வேண்டியதில்லை. அதற்குப் பிச்சைச் சப்பளம் போன்ற 20 ரூபா கழிவுதானும் கிடையாது. அதைக் கடையிற் கொண்டுபோய் விலை கூறி விற்றுவிடவேண்டும். அல்லது சிசுக்கொலை செய்யவேண்டும். அப்படிச் செய்ய விருப்பம் இல்லாவிட்டால் மூத்த பிள்ளைகளில் ஒன்றை அது ஏழுவயது நிரம்பாத பல்லு விழாத பாலனுயிருந்தாலும் பாட்டன் பாட்டிமாரோடு போய்ப் பிச்சை எடுக்கச் சொல்லி உதைத்துத் தள்ளிவிடவேணும். தனிச் சிங்களச்சட்டததை அமுல் செய்யவும், செலவுக்குக் கட்டாத அரிசி வியாபாரஞ் செய்யவும், கல்லமுறையில் ஊரவர்களால் செய்யப்பட்டுவந்த தொழில்களைத் தேசியம் என்ற போர்வையில் இலஞ்சம் மூதலீய ஊழலகள் நிறைந்த கட்டத்தில் நடைபெறும் தொழில்களாக மாற்றவும், அவசியமற்ற மற்ற ஆடம்பரச் செலவுகளுக்கும அரசாங்கத்துக்குப் பணம் வேணுமல்லவா? இதுதான் எங்கள் தற்காலக் காருண்ணிய அரசாங்கத்தின் செங்கோன்மை!

எனக்குத்தான் உங்கள் வோட்டுச் சம்மதப் புள்ளடியைப் போடுங்கள். சந்திர சூரியர்களை வேணுமானுலும் பிடித்துக் கட்டிக் கொண்டு வந்து தருவேன். வேறொருவராலும்செய்யமுடியாத காரியமிது. நான் சர்வ வல்லமையுள்ளவன். ஆகையால் உங்கள் புள்ளடியை எனக்குத் தான் போடவேண்டும் என்று வீடுவீடாகச் சென்று பல்லைக் காட்டிப் பிச்சை கேட்கும் அரசியல்வாத அபேட்சகர்கள் இப்படிப்பட்ட கொடிய வரிகளைக் குறைப்பதற்கு முன் வருவார்களா?

— ஒரு வரியிறுப்பாளன் —

## தேர்தலும் நாமும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இனத்திற்கும் அரசியல் திட்டத்தில் புறம்பான பாதுகாப் பளிக்கப்படவில்லை. இதுவே தமிழ்த் தலைவர்களின் பெருங் குறை. இதை நிவிர்த்தி பண்ண இனி யாராலும் முடியாது. தமிழுக்காவது தமிழருக்காவது ஏதும் சலுகை காட்டும் சிங்களப் பிரமுகர்களுக்கு ஒருபோதும் சிங்கள மக்கள் வாக்கு (வோற்) கொடுப்பதில்லை. அவ்வளவிற்குத் தமிழ்த்துவேஷம் சிங்கள மக்களிடம் பரவி இருக்கிறது. இதற்குப் பண்டாரநாயக்க போன்ற அரசியல்வாதிகளே பொறுப்பாளிகள். நமக்குக் கடவுள் அல்லாது வேறு துணை கிடையாது. தமிழன் வணங்கிய முருகனே தமிழரைக் காக்க வல்லவர். சததியம் நிலைநிற்கும், அறம் வெல்லும்; ஆண்டவனில் பாரத்தைப் போட்டுவிட்டு முழுநம்பிக்கையுடனும் அன்புடனும் நமது வாழ்க்கையை நடத்துவோமாக. வேறு வழி இல்லை. "வெல்குக அறமும் மெய்ம்மையும் பொறையும் மேகமேனியனும் வெல்லாமற் செல்லுக பாவமும் பொய்ம்மையும் வெகுளியும் தைத்தியர் குலமும்",

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சித்தாந்தக் கருத்துக்களைப் பாடி, நோபெல் பரிசுபெற்ற ஆங்கில மகாகவி

# டி. எஸ். எலியட்

## (1888 — 1965)

[ வித்தியாரத்தினம், நவாலியூர் சோ. நடராசன் ]

முற்றேடர் — 2

தொனி என்ற அலங்காரத்தையும், இரட்டுறமொழிதல், உடனிலைச் சிலேடை, உள்ளுறை உவமம் என்ற பல வகையான குறிப்புப்பொருள் உணர்த்தும் அணிகளையும் மிகைப்படக்கூறல் முதலிய உத்திகளையும் பயன்படுத்தியே எலியட் தமது அனுபவத்தையும் உணர்ச்சிவேகங்களையும் புலப்படுத்துகிருர். கவிகளைக் காமதேனுவுக்கு உவமைகூறுவது கீழை நாட்டவர் மரபாகும். அதாவது வேண்டுபவர் வேண்டும் பொருளை அது கொடுக்கும். எலியட்டினுடைய கவிதைகள், பல இலக்கியங்களிலும் பயின்றுவரும் பாத்திரங்கள் சம்பவங்கள் என்பவற்றைத் தலைக்கீடாக வைத்துக் கொண்டு கவி தனது குறிப்புப் பொருளை நிறைந்த பொருள்வளத்தை யுண்டாக்கக்கூடியவாறு பயன்படுத்தும் இயல்பைக் கொண்டன. வெளிப்படையான பொருள் ஒருபுறமிருக்கக் குறிப்பாகப் பல பொருளைக் காட்டும் தொனிவளமுடையன. அதனுலேதான் அவருடைய கவிதைகள் விளங்குவதற்கு மிகக் கடினமானவையாகின்றன. அதனுலேதான் நவில்தொறும் நூல்நயம்போலப் பலவகையான பொருள்களைக் கொடுத்துப் பலவகை விளக்கங்களுக்கு இடந்தருகின்றன. பொதுப்படையாகப் பேசிக்கொண்டே போகாமல் அவருடைய பாட்டுஒன்றை இங்கே உதாரணமாகக் காட்டி விடலாம். இது மரீனு என்ற ஒரு பெண்ணைப் பற்றியது. பழைய கிரேக்க புராணக் கவிதைகளிற் காணப்படும் ஒரு சிறிய சம்பவம், மரீனு, பெரிக்ளிஸ்என்பவனுடைய மகள். ஷேக்ஸ்பியர் மகா கவி இப்பொருளை வைத்து நாடகமே எழுதியுள்ளார். தன் மகள் கடலிலே இறந்து போனுள் என்று பெரிக்கிளீஸ் எண்ணுகிருன். ஆனுல் ஈற்றில் அவள் உயிரோடு இருப்பதை அவன் உணர்கிருன். அவன் மனத்திலே வியப்புண்டாகிறது. காணுமற்போன மரீனுவின் தோற்றம் உருவெளித்தோற்றமோ? நூதனமான கனவோ? நித்திரையிலே "தோன்றி என்னைப்போன்ற மடையரை ஏமாற்ற வந்த காட்சியோ" என்று ஐயமுறுகிருன். எலியட் இந்தச் சம்பவத்தைத் தன்னுடைய ஆன்மானுபவத்தை வெளியிடுதற்கு ஏற்றதொரு தலைக்கீடாகக் கொள்ளுகிருர். கொண்டு இந்த அழகிய பாடலை எழுதுகிருர். எலியட்டின் பாடல்களில் கற்பனை உருவங்களே சினிமாப் படத்தில் அடுத்தடுத்து வரும் படஇதழ்கள்போலமாறிமாறி ஓட்டந்தரும். தர்க்கரீதியான ஒழுங்கு முறையோ இலக்கண அமைதியோ காணக்கிடையா. எல்லாம் படக்காட்சி போன்ற உருவத் தோற்றங்களே அடுக்கடுக்காக வரும். பாடலை உரைச்செய்யுளாக இங்கே முதலில் மொழிபெயர்த்துக் கொள்வோம். ' பெரிக்கிளீஸ் தன் மகளைக் காணும்சட்டம், கடலில் கப்பலில் செல்லும் போது உண்டாகும் காட்சி.

"ஆழ்கடல் இவையோ?
தொடுகரை இவையோ?
வண்ண மால்கிறப்
பாறைகள் இவையோ?
எண்ணருந் தீவுகள் இவையோ?
மரக்கல முகத்தில்
மறிதிரை இவையோ?
தேவதாருவின் நறுமணம் பரவ
பனிப்புகார் மறைத்திடப்
பட்சகள் பாடும்
என்ன தோற்றக்களிவையோ
ஓ கோ என் மகள்!
போர்எனுஞ் சுணங்கன்ன்
பல்லைத் துலக்குவோர்
காலதேவனைக் கருத்திற்
கொண்டார்
ஓலமிட்டலறும் கூகையின்
ஒலியில் குதூகலிப்போர்
கால தேவனைக்
கருத்திற் கொண்டார்
எல்லாமின்பமென் றெககளித்
திறுமாந்திருப்போர்
கால தேவனைக்
கருத்திற் கொண்டார்
விலங்கு வாழ்க்கையி
லின்ப மடைந்திருப்போர்
காலதேவனைக்
கருத்திற் கொண்டார்
இவரெலாம்
போலித் தோற்றமாயினர்;
மாருதம் வீசிடத்
தேவ தாருவின்
செம்மணம் பரவிடக்
கோகிலத் தொனியிலே
பனிப்புகார் படர்ந்திட
அருளினுல் மாயமா
யிங்கே மறைந்தனர்
மயங்கினேன் ஆயின் இத்
திருமுகம் மலர்ந்ததே
கையிலே நாடி
தளர்ந்த தாயினும்
மெய்யுயிர்ப் பதிகமாய்ப்
பலம்பெற்றதுவே
யார்செய்ததித் திருவருள்,
யாருதவினரோ
அணுக்கத்துக்கணுக்கமா
யப்பாலுக் கப்பாலாய்
சொப்பனத்துணர்ந்த
மெல்லிய பேச்சு
இலைமறைந் தெழுந்த
சிறுநகைக் கூட்டம்
விரைந்துசெல் லடிகளி னரவம்
நதியெலாம் கூடிய சங்கமம்
கலத்துமுகம் பனிக்கட்டியால்
கொடிந்தது
பூசிய பூச்செலாம்
வெம்மையாற் பொரிந்தன.

நான்செய்தவிக்கலம்
மறந்தேன்:
மறதியில் நினைந்தேன்
பாய்க்கயிறு புரிநெகிழ
பாயும் இற்றது
ஒருஜூன் மற்ெருரு
செப்டெம்பர்
இரண்டுக்கு மிடையில்
தெரிவதற்கரியதும்
பாதிதெரிந்ததும்
தெரியாததுமான இதனை
எனதாக்கிற்றே
கலத்தில் தொளைகண்டது;
அடைத்துவிடல்வேண்டும்
இவ்வுரு, இத்திருமுகம்
இவ்வாழ்வு
எனக்கு அதீதமான
காலத்துக்குட்பட்ட
உலகில் வாழ்வதற்கு
வாழமுயலும்;
என்வாழ்வை இல்வாழ்வுக்காகத்
தியாகஞ்செய்வேன்
என்பேச்சை பேசாத
பேச்சுக்கென ஓதுக்குவேன்
அங்காந்த வாயுடன் அந்தப்
போதத்தைப் புதுநம்பிக்கையை,
புதியகலங்களை
எண்ணி;
சூழ்கடல் இவையோ,
தொடுகரை இவையோ
நீள்கருங் கல்லின்
தீவுகள் இவையோ
என்கலம் பட்டு உடையுமோ
கோகிலம் பனிப்படலத்தூடு
கூவியழைக்கும்
என்மகளை".

இப்பாடலின் பொருளை விளங்குவதற்கு அதிலே அடங்கியுள்ள குறிப்புப் பொருள்களையும் உருவகங்களையும் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். கலம் என்று இங்கே குறிக்கப்படுவது இந்தக் காயமென்னும் மரக்கலத்தை. அது சம்சாரம் என்ற கடலிலே செல்லும்போது மறைந்து போனதாகக் கருதப்பட்ட மரீனு என்ற திருவருளின் தோற்றம், ஒரு கணப்பொழுது உண்டாகிறது. தெளிவாகவன்று; புகார்ப்படலத்தால் மறைக்கப்பட்டதொரு அழகிய தீவிலே மரீனு இருப்பதாகப் புலவருக்கு ஓர். அருட்காட்சி உண்டாகிறது. பின்னர் அந்தக் காட்சி உலகவாழ்வைத் துறந்து தெய்வீக வாழ்வு வாழவேண்டுமென்ற ஊக்கத்தை யளிக்கிறது ஆனுல் தெளிவில்லாமலிருக்கிறது. புதிய தோற்றம், புதிய தீவு, நிசமானதா? வழியிலே பாறைகளிலே தொட்டுக் காயமென்ற கலம் உடைந்துபோகக் கூடுமா என்ற ஏக்கம் புலவர் உள்ளத்திலே உண்டாகிறது. ஆனுல் திருவருளின் உண்மையை அத்தீவிலுள்ள கோகிலங்களின் அழைப்புக் குரலால் எலியட் உணர்த்துகிறார்.

— தொடரும்

---

வில்லூன்றித் தீர்த்தக் கேணி

## அறிவித்தல்

தீர்த்தக்கேணி அந்தியேஷ்டி தர்ப்பணம் சுவாமி தீர்த்த மேத்தல் முதலியவைகளுக்கே உரியது. தற்போது கேணி பழுதடைந்த நிலையில் இருப்பதால் கேணியில ஸ்நானம் செய்வதை நிறுத்தியிருக்கிறேம், எனவே வாளியில் அள்ளிப் பாவிப்பதல்லாமல் ஒருவரும் இறங்கி ஸ்கானம் செய்யப் படாது. சமய கிரியைகளுக்கு ஸ்நானம் செய்ய உத்தரவு பெற்றுச் செய்தல் வேண்டும்.

இங்ஙனம்,
சோ. இராசரத்தினம்,
பாதுகாவலர்.

1-2-65.

---

### கந்த புராணம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் சமயத்தின் நிலை திருநீற்றினுற்றுன் மேன்மையடையும். சைவபரிபாலனசபை போன்ற சபைகளும் சைவப் பெரியார்களும் இருப்பதால் சைவம் உய்யும் என்பது உண்மை.

காசிபர் தன் பிள்ளைகள் மூவருக்கும் தருமம் என்று ஒரு பொருள் உளது என்று உபதேசித்தார். தாயாகிய மாயை தன் பிள்ளைகளை அசுர குருவாகிய சுக்கிராச்சாரியாரின் உபதேசத்தைக் கேட்டுத் தம் வாழ்வைக் கெட்ட வழியிற்செலுத்தினுர்கள். பிள்ளைகளை இளமையிலே நல்ல ஆசிரியரிடம் கல்விகற்க வைக்க வேண்டும் கெட்ட ஆசிரியராற் பிள்ளைகள் கெட்டு விடுவார்கள் என்ற பேருண்மையைக் கந்தபுராணம் காட்டுகின்றது. செந்திநாத ஐயர் என்ற பெரியார் கந்தபுராணப் பேருண்மைகளை விளக்கியுள்ளார். கந்தபுராணத்தை மறக்க முடியாதது போல செந்திநாத ஐயரையும் மறக்க முடியாது.

---

# கந்தபுராணம்

## ஒரு சித்தாந்தக் கருவூலம்

[ சைவ பரிபாலனசபையாரால் நாவலர் மண்டபத்தில் கொண்டாடப்பட்ட கச்சியப்பசிவாசாரியர் குருபூசைத்தினத்தில் ஸ்ரீ வ. குகசர்மா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.]

கந்தபுராணத்தின் அடிப்படை நோக்கம் எதுவென்பது அதன் வாழ்த்துப் பாவிலே புலனுகின்றது. மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் என்பதே அந்தச் சிறந்த நோக்கம், தருமம், உண்மை, அன்பு, தவம் என்பவற்றுலே சைவநீதி உலகத்தில் விளங்கும். அவ்வாருய தருமம் முதலியன தழைக்கவும் பல துணைப்பொருள்கள் தேவையாகின்றன. அவற்றுள் முதலாவது பொருள் மழை, "தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம் வானம் வழங்காதெனின்" என்பது வள்ளுவர் வாக்கு. மழை பெய்தலினுலே செல்வங்கள் சிறப்புற்ருேங்கும் செல்வங்களை அநுபவித்து நல்வாழ்வு வாழ்வதற்கு நல்லரசாட்சி தேவை. நல்லரசாட்சி இல்லாவிடத்து சமயமும் செல்வச் செழிப்பும் குன்றிவிடும். இக்கருத்தையே வள்ளுவர் "ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர் காவலன் காவானெனின்" என்று கூறியுள்ளார். இவ்வாறு பல பொருளையும் தன்னுள் அடக்கி "வான்முகில் வழாது பெய்க" என்று தொடங்கும் வாழ்த்துச் செய்யுள் கூறுகின்றது.

தருமத்தின் பெருமைபற்றியும் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்கள் பற்றியும் காசிபன் உபதேசப் படலத்தில் விரிவாகக் கூறப்பெற்றுள்ளது. சித்தியார் திருமுறைகள் ஆகியவற்றுள் சிறந்த கருத்துக்களை நாம் கந்த புராணத்தில் காணக்கூடியதாக இருக்கிறது. உதாரணமாக 'யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் போலவாங்கே மாதொரு பாகனுர்தாம் வருவர்" என்பது சிவஞான சித்தியார். இக்கருத்தினை விளக்கும் கந்த புராணச் செய்யுள் பின் வருமாறு:

"யாதொரு பொருளையாவர்
இறைஞ்சினும் அதுபோய்
மூக்கண்
ஆதிபை அடையுமம்மா
அங்கதுபோலத்தொல்லை
வேதம துரைக்கின்ற
வியன்புகழ் அனைத்தும்
மேலாம
நாதனை அணுகும் எல்லா
நதிகளும் கடல்சென்றென்ன'

தவம் என்னும் அரிய செயல் தருமத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். தேவர் பதங்களையும் பிறசெல்வங்களையும விரும்பிச் செய்யும் தவம் அவமானது. அழிவையுடையது. துன்பத்தைத் தரவல்லது. இந்திர குமாரனுகிய சயந்தன் சுகமான வாழ்க்கையை விரும்பினுன். ஆனுல் அதிக துன்பம் ஏற்பட்டது. அதற்குப் பின்பே அவன் உண்மையை உணர்ந்தான். நிலையான இன்பம் என நினைத்த தேவலோக வாழ்க்கை தீராத் துயரைத் தந்துவிட்டது. இந்த உண்மையை ஆசிரியர்

"நாடில் விண்பதச் செய்கை
யீதெனில்
எம்பிரானல்கும் வீடதே யல்லால்
துன்பறு
மார்க்கம் வேறுண்டோ",

என்று நமது மனதில் படியும்படி சுட்டிக் காட்டுகிருர்.

நிலையான அன்பின் தன்மையைவீரவாகுதேவர் மூலம் காண்கிறேம். குபேரனது செல்வ வாழ்க்கையும் வேண்டாம், இந்திரனரசும் வேண்டாம், மாலயன் பதங்களும் வேண்டாம். "சால நின்பதத் தன்மையே வேண்டுவன் தமியேன்" என்று வீரவாகு தேவர் முருகப்பெருமானை நோக்கிக் கூறுகிருர். இது மாணிக்கவாசகர் கூறும் "கொள்ளேன்புரந்தரன் மாலயன் வாழ்வு" என்னும் முதலையுடைய திருவாசகச் செய்யுளை நினைவூட்டுகிறது

மூவகைத் தளைகளின் தன்மையை கந்தபுராணத்தில் வரும் முப்பெரும் அசுரர்கள் மூலமாகக் காண்கிறேம். பாசங்கள் ஆன்மாவை இருளில் ஆழ்த்தும் தன்மையுடையன, அவ்வாறே அசுரர்களும் "அடுதிறல் வலி பெற்றுள்ள அவுணராம் பாணுட் கங்குல்" எனக் கூறப்படுகிருர்கள் ஆற்று நீர் தெளிவின்றி ஓடுவது சிவபெருமானே பதியென அறியாரின் உள்ளத்திற்கு உவமை கூறப்பட்டுள்ளது. உப்புநீரை நன்னீராக்கி மழையாகத் தரும் முகில்கள் சீடனை நல்வழியிற் செலுத்தும் குருவிற்கு உவமையாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல சைவசித்தாந்தக் கருத்துக்களும் இலக்கிய நயமும் நிரம்பியது கந்த புராணம். இவற்றைப் பலரும் நன்கறியச் செய்வதற்கு கச்சியப்ப சிவாசாரிய தினத்தில் பெரும் விழா எடுப்பது சைவபரிபாலனசபைபோன்ற சபைகளின் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரம் 21-3-65 — 27-3-65

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தனிப்பட்டதொழில்களில் முன்னேற்றம். புதுத் தொழில்களில் பலன். உடல்நலம்குன்றும். திங்கள் செவ்வாய் புதன் முற்பகல் கவனம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகினி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

தனிப்பட்ட தொழிற்துறையில் முன்னேற்றம். பொருள் வரவு. உறவினருடன் பகை. புதன்வியாழ வெள்ளி கவனம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, கருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

செலவு அதிகம். எனினும். சமாளிப்பீர். புதுத் தொழில்கள் தடையுடன்நிறைவேறும். வெள்ளி பிற்பகல் சனி கவனம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

தொழில்முறையில் மாற்றம். பிரயாணம் உண்டு. நிம்மதிநங்கும். பிறரால் உதவி. பொருள் கிடைக்கும்

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

நிம்மதி உண்டு. பிரயாணம் சுகக்குறைவு. நண்பர்களுடன் கருத்து வேறுபாடு நிகழும்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

நன்மையான மாற்றங்கள் நிகழும் நல்ல சுகம் எதிர்பாராத நன்மைகள் உண்டாகும். எதிர்ப்புகள் நீங்கும்.

**துலாம்,** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

புறங்கூறுபவர்களிடம் எச்சரிக்கை. புதுமுயற்சிகளில் தாமதம். பணவரவு. நண்பர்களிடம் கண்டனம், நிலங்களால் நன்மை.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

புதுமுயற்சிகளில் பலன். பகைவர்க்குத் தோல்வி சுகம் குறையும். குடும்பத்தில் கருத்துவேறுபாடு.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

உரிமைகளை இழப்பீர். உட்பகைவர்களிடம் கவனம். தந்தைவழி உறவினரால் துன்பம். சுகம்குறையும்

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

சொந்த முயற்சிகளிலும் அலுவலக முயற்சிகளிலும் நன்மையான மாற்றங்கள் நிகழும். புதிய தொழில்களால் பலன். சுகம் குறையும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம். சதயம், பூரட்டாதி

தனிப்பட்ட தொல்லைகள் தீரும் நண்பர்களால் உதவி, உடல் நலம் தொடர்ந்து பாதிக்கப்படும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதிரேவதி. 1, 2, 3ம் பாதம்.

நண்பர்களிடம் விளக்கக்குறைவு அதிக செலவு, பகைவர்கருத் தோல்வி, நிலங்களால் நன்மை.

## தமிழ் அழிந்து

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சேர்ந்த நூல்கள்கள் பிறநாட்டவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதற்குக் காரணமாயிருந்தது. பண்டைத்தமிழ்ப் பெரியோர்கள் கொண்டிருந்த "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்பது போன்ற பரந்த கொள்கைகளாகும், உள்ளத் தூய்மையுடையவனின் சொல்லிலே தூய்மையைக் காண முடியும், சொல்லிலேகாணப்படும் தூய்மையைச் செயலிலே காட்ட முடியும். (வளரும்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B 4823

1. சுப்பிரமணியம் அமிர்தலிங்கம் பெண்
2. முத்தம்மா இருவரும், 151, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்

— வழககாளிகள்

எதிராக

1. சினிவாசகம் சிவராசசிங்கம் — புலோலி மேற்கு பருத்தித்துறை
2. வெற்றிவேலு கனகசபை சவப்பிரகாசம்பிள்ளையின் கைம்பெண் சிவக்கொழுந்து வீரபத்திரர்கோவில், அல்வாய் வடக்கு, பருத்தித்துறை.

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 4823-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1965-ம் ஆண்டு சித்திரை மீ 24 உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 23670. 21-5-62 தொடக்கம் 18-10-62 வரைக்கும் ரூபாய் 1800-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் — குறைக்கவேண்டிய ரூபா 5000 (கோட்டுச் செலவு கொடுத்தாய்விட்டது).

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி, கட்டைவேலிக் கோவிற்பற்று. அல்வாய் பெருமியார் குறிச்சி இறை "சிப்பிமணல்" நிலப்பரப்பு 4 குளி 5, வீடும் குசினியும் பயிர் வகைகளும், அதற்குள் அடங்கியவைகளும், இவ்வாதனம் ஐந்தாவது துண்டாக 2244-ம் இலக்கப் படத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது இப்படம் 1945ம் வருஷம், மாசி மாதம் முதலாம் திகதி, உத்தரவுபெற்ற உலாந்தா K. வேல்முருகு அவர்களால் தயாரிக்கப்பட்டு 1945-ம் வருஷம் தை மாதம், 13-ந் திகதி 7432-ம் இலக்கப் பிறிவிடுதல் உறுதியுடன் அணைக்கப்பட்டு பிரசித்த நொத்தாரிஸ் C. மயில்வாகனம் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது. நிலப்பரப்பு 10 1/8 ஆனால் குறிப்பிட்ட 2244-ம் இலக்க அளவுபடத்தின்படி நிலப்பரப்பு 9 குளி 5. குறிப்பிட்ட 5-வது துண்டின் நிலப்பரப்பு 4, குளி 5, வீடும் குசினியும், பயிர் வகைகளும் மற்றும் அதற்குள் அடங்கியவைகளும், எல்லை கிழக்கு குறிப்பிட்ட படத்தில் காட்டிய 6-ம் துண்டுகள், வடக்கு குறிப்பிட்ட படத்தில் காட்டிய 9-ம், 4-ம் துண்டுகள், மேற்கு ஒழுங்கை, தெற்கு ஒழுங்கையும் குறிப்பிட்ட படத்தில் காட்டிய 6-ம் துண்டில் இருக்கும் கிணற்றுப் பங்கும் வழிவாய்க்கால் உரிமையும், படத்தில் காட்டிய 9-ம் துண்டில் காட்டிய ஒழுங்கைப் பங்கும்,

வே. கோபாலபிள்ளை,
கொம்மிஷனர்&விலைமதிப்பாளர்,
22, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம், 13-3-65.
M. 296 19-3-65.

## குருபூசை

20-3-65 சனிக்கிழமை யிரவு 6½ மணியளவில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் காரைக்காலம்மையார் குருபூசை சபை நாவலர்மண்டபத்தில் நடைபெறும். காரைக்காலம்மையார் என்னும் பொருள்பற்றி சைவப் பிரசாரகர் பொன். அப்புக்குட்டி அவர்களும் "காரைக்காலம்மையார் 'திருவருட்டிறன்' என்னும் பொருள்பற்றி சைவப் புலவர் வித்துவான் க. கணபதிப்பிள்ளை B.A. அவர்களும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள்.

# விற்பனவு விளம்பரம்
## Commission Sale

பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டு வழக்கு இல, 7680

வழக்காளி:

1. வேலுப்பிள்ளை இராஜையா
2. பெண் நவமணி இருபேரும் புலோலி கிழக்கு

எதிரிகள்

1. சதாசிவம் சிவசிதம்பரம்
2. பெண் சிவபாக்கியம்
3. வல்லிபுரம் இராமநாதன்
4. பெண் சீதாலட்சுமி எல்லோரும் தும்பளை

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வையின்படியும் குறித்த கோட்டார் எனக்கு அனுப்பிய கொமிசன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் 1965-ம் ஆண்டு சித்திரை மாதம் 10-ந் தேதி சனிக்கிழமை (10-4-65) பிற்பகல் 3 மணியளவில் அனுராதபுரத்தில் 1-ம் ஆதனமும் 12-ந் தேதி (12-4-65) திங்கட்கிழமை ஆற்பகல் 9 மணியளவில் தும்பளையில் 2-ம் ஆதனமும் முறையே குறித்த ஆதனங்களிடமாகவிருந்து என்னாற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன டாப்பு

வடமத்தியமாகாணம் அனுராதபுர டிஸ்திறிக் அனுராதபுரப் பட்டினத்தில் மூன்று அறைகளும் அவைக்குச் சேர்ந்த வெளி விறாந்தைகளும் அவைகளிருக்கும் நிலமும் இது 131767-ம் இலக்கப் படத்தில் 1010-ம் இலக்கத்துண்டில் வடக்குப் பாகம், இதன் விசாலம் பேட்சு 13 1/4. இதில் தெற்கறையும் அதற்குச் சேர்ந்த வெளிவீடும் அிருக்கும் நிலமும், இதன விசாலம் பேட்சு 4 4/9. எல்லை கிழக்கு குருநாகல்றோட்டுக் கருகாமையாக விடப்பட்டநிலம். வடக்கு-வல்லியப்பர் இராமலிங்கத்துக்குடைய வாதனம். மேற்கு-றோட்டு. தெற்கு 1010-ம் இலக்கத் துண்டின் மிகுதிப் பாகம். இவ்வெல்லைக்குட்பட்டவைகள் முழுவதும் கோட்டால் மதிக்கப்பட்ட விலை ரூபா 450-00.

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று தும்பளையிறை பம்பப்பை நில. பர. 1 குளி 15 1/4 இதுவும் ஷெயிறை தம்பப்பை குளி 16 1/4 இதுவும் ஷெயிறை நாவலடி நில பர 5 5/8 இதுவும். மேற்படியிறை நாவலடி நில பர 13 3/4 இதுவும் மேற்படியிறை திக்கிரி நில. பர. 8½ ஷெ வீடு 1. இலைகளில் நில. பர 5 குளி 3 இதுவும் ஷெயிறை வயிரகுண திக்கிரி நில பர 4 இதுவும் ஷெயிறை வயிரகுண திக்கிரி நில பர 2 இதுவும் ஷெயிறை வயிரகுணதிக்கிரி குளி 7 7/8 இதுவும் மேற்படியிறை வயிரகுணதிக்கிரி நில. பர. 1 3/4. ஷெயிறை வயிரகுணதிக்கிரி நில பர 4 குளி 14 5/8, இதுவும் தற்காலம் ஒரே துண்டாயிருக்கின்றன. இதற்கு உலாந்தா மேஸ்தர் க. கணபதிப்பிள்ளையால 1933-ம் ஆண்டு சித்திரை மீ 23-ந் தேதி 5864-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி நில பர. 27 குளி 15 13/16. இதில் வடமேற்குப் புறமாக நில. பர. 5 நீக்கி மிகுதிக்கு நில. பர. 22 குளி 15 13/16 இதில் மேற்குப் புறமாக உலாந்தா மேஸ்தர் பொ. ஜயாத்துரையால் 1942-ம் ஆண்டு பங்குனி மீ 14-ந் தேதி 15-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி நில பர 8 பனைகளும் எல்லை கிழக்கு இராமலிங்கம் வல்லிபுரத்திற்குடையவாதனம் வடக்கு இராமலிங்கம் வல்லிபுரத்திற்குடைய வாதனமும், றோட்டும். மேற்கு இராமசாமி பரமகுரு பெண் அன்னலட்சுமிக்குடையவாதனமும், கதிர்காமு கைம்பெண் சிதேவிப்பிள்ளைக்குடைய வாதனமும், தெற்கு கதிர்காமர் கைம்பெண் சிதேவிப்பிள்ளைக்குரியவாதனமும் நாகப்பர் வயிரமுத்துவுக்கும் மறுபேருக்குமுரிய வாதனமும். இவ்வெல்லைக்குட்பட்டவைகளடங்கலும். கோட்டால் மதிக்கப்பட்ட விலை ரூபா 12,000 00.

| | |
|---|---|
| முதல் | 2000 00 |
| வட்டி 2-11-63 வரைக்கும் | 1747 20 |
| வட்டி 2-11-63 தொடக்கம் 8-4-64 வரைக்கும் 20 0 ரூபாய்க்கு 12 வீதம் | 140 00 |
| | 3887 20 |
| கூடியதொகை | |
| வட்டி கூடிய தொகை ரூபா 3887-20 க்கு 5 வீதம் 8-6-64 — 9-2-65 | 139 50 |
| | 4016 70 |
| கோட்டுச் செலவு 15-8-64 | 31 50 |
| | 4048 20 |
| 5-10-64-ல் கட்டிய தொகை | 500 00 |
| | 3548 20 |

சந்நிதிவேல்,
பருத்தித்துறை. 25-2-65.

கா. முத்துக்குமாருஜயர்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer.

M. 25 19-3-64


யாழ்ப்பாணம்

# — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


## அறிவித்தல்

—0—

3-4-1965 சனிக்கிழமை காலை 10 மணிவரை கோப்பாய்க்கிராம சபைத் தலைவரால் கோப்பாய் தெற்கு 4-ம் வட்டாரம் பள்ளிக்கூட ஒழுங்கை றோட்டு வேலைக்கு "சீல்" வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ரூ. 5000 க்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவுள்ள ஒப்பந்தகாரர்களுக்குமட்டும் கேள்விப் பத்திரங்கள் 2-4-1965 நண்பகல் 12 மணிவரைக்கும்வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 5/- கேள்வி பத்திரக கட்டுப்பணமாக ரூபா 20-ம் செலுத்திய பின்னரே கேள்விப் பத்திரம் வழங்கப்படும். கேள்விப்பத்திரப் பணம் ரூபா 5/-ம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. மேற்கொண்ட விபரங்களைதவும் அறிய விரும்பின் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

த. சின்னத்துரை,
தலைவர்,
கிராமசபை - கோப்பாய்.

கிராமசபை அலுவலகம்,
கோப்பாய்,
13-3-1965.
M. 297 19-3-65.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
இல, M. B. 4558

வண்ணார்பண்ணை கிழக்கு

1. இளையதம்பி வயித்திலிங்கம்
2. பெண் சிவஇரத்தினேஸ்வரி

— வழக்காளிகள்

எதிராக

அரசடி றோட்டு வண்ணார் பண்ணை கிழக்கு
மாணிக்கம் சின்னத்தம்பி

— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B. 4558-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1965-ம் ஆ வைகாசி மாதம் 6-ந் திகதி (6—5—65) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 2850 இன்னும் ரூபா 1500 க்கு 26-1-2 தொடக்கம 27-9-62 வரைக்கும 100-க்கு 12 வீத வட்டியும் பின்பு கூட்டுததொகைக்கு இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும் அறவிட்ட ரூபா 300 நீக்கி. பாக்கி செலவுகள கழித்துவிடப்பட்டது.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை "நீர்நிலையடி" அல்லது "நீர்நொச்சி அடி" பர. நில. இலா. 30 இதல் பிரிக்கப்பட்ட 12-ம், 13-ம் துண்டுகள் இரண்டும் சேர்ந்து பர. நில. இலா- மூன்று, இவை கருமாதிகார உலாந்தா J. D. வீரசிங்கத்தால் 28-1-48 ல் அளந்து வரைந்த 2412-ம் இலக்கப் படத்தின்படி பர. நில. இலா. மூன்று. 10 - ம் துண்டுக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கும், 15-ம் இலக்கத் துண்டின் ஒழுங்கை வழியாக தெற்கேயிருக்கும் றோட்டுக்குப் போகும் பாதை உருத்தும். ஆனால் சொல்லப்பட்ட படத்தில் 15-ம் துண்டிலிருக்கும கிணற்றில் பங்கு நீக்கி மேற்சொல்லப்பட்ட ஆதனத்துக்கு எல்லை கிழக்கு வயித்திலிங்கம் கதிரவேலு, வடக்கு சொல்லப்பட்ட படத்தில் குறிக்கப்பட்ட 11-ம் துண்டு. மேற்கு கையொழுங்கை, படத்தின் 15ம் துண்டு தெற்கு சொல்லப்பட்ட படத்தின் 14-ம் துண்டு. இதடங்கலும் அதைச சேர்ந்தவைகளும். ஆனால் 16-ம் துண்டின் வடக்கெல்லை வேலியும், மேற்கொழுங்கையின் கிழக்கும் மேற்கும் உள்ள வேலிகள 16-ம் துண்டுக் காணிகாறருக்கு நீத்தம்,

முற்பதிவு D 231/107,

தா, செல்லையா,
கொமிசனரும் விலமதிப்பாளரும்
இல: 37. கொழும்புததுறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
M 294 19.3-65,

"திக்கும் தெள்ளமுதைச் சித்தாந்தத் துட்பொருளை முத்திக்கு வித்தை முதல்நினைப்ப தெக்காலம்?"

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி 2-ம் ஒழுங்கை 2-ம் இலக்கத்தில்வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 19 3-1965 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org